### சின்னாளபட்டி பேரூராட்சிப் பகுதிகளில்

# அ.தி.மு.க. - பா.ஜ.க.-த.வெ.க. கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர் ஐ. பெரியசாமி முன்னிலையில்!

திண்டுக்கல், ஜன.3-

சின்னாளபட்டி பேரூராட்சிக்குட்பட்ட மேட்டுப்பட்டி, நாகம்மன் கோவில் தெரு உட்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த அ.தி.மு.க., பா.ஜ.க. மற்றும் த.வெ.க. கட்சிகளைச் சேர்ந்த சுமார் 40க்கும் மேற்பட்ட இளைஞர்கள், நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலை யில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

இதுபோல முன்னிலைக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த த.வெ.க. கிளைச் செயலாளர் ராமர் தலைமையில் அக் கட்சியைச் சேர்ந்த 20 இளைஞர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர், கட்சியில் இணைந்த வர்களுக்கு கட்சி சின்னம் பொறித்த பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்து வரவேற்றார்.



அவர்களிடம் பேசிய அமைச்சர், பல கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள்,நிர்வாகிகள் கழகத்தில் இணைகிறார்கள் என்றால் அதற்கு ஒரே காரணம் முத்தமிழ் அறிஞர் வழியில் வந்த திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் இளைஞர்களின் எழுச்சி நாயகன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்புமிகு திட்டங்களும், செயல்பாடுகளும்தான் காரணம். ஆத்தூர் தொகுதியைப் பொறுத்துவரை 150க்கும் மேற்பட்டோருக்கு அரசு வேலை வாய்ப்பை வழங்கி உள்ளோம்.இன்று இளைஞர்கள் அதிகளவில் கழகத்தில் இணைகிறார்கள் என்றால், அவர்களுக்கு நிச்சயம் தகுதி கேற்ப அரசு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையே, அவர்களையும், கழகத்தில் இணைந்தவர்களையும், கழகம் ஒரு போதும் கைவிடாது என்றார்.

நிகழ்ச்சியின்போது ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் கணேசன், வாஞ் சிநாதன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் சரவணன், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார், உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உணவு பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறைசார்பில் 671 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர், இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜே.யு.சந்திரகலா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், நகராட்சி தலைவர் சுஜாதா வினோத் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நெல்லை கிழக்கு மாவட்டத்தில் ஜன.3 முதல் 9ஆம் தேதி வரை

# இரு பாலருக்கும் தனித்தனி விளையாட்டுப் போட்டிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிவிப்பு!

நெல்லை,ஜன.3-

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் இன்று (03.01.2026) முதல் 09.03.2026 வரை 7 நாட்கள் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய,நகர பேரூர் பகுதிகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகிறது. என நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.



அது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர,பேரூர்,கழகச் செயலாளர்கள் வருகின்ற இன்று (03.01.2026) முதல் தொடங்கி 09.01.2026 ம் தேதி வரை (அதாவது 7 நாட்கள்) ஒன்றிய,நகர, பேரூர் கழக பகுதிகளில் கிரிக்கெட், வாலிபால், கபடி,ஓட்டப் பந்தயம், மிதி வண்டி,கோ கோ என ஆண், பெண் இருபாலருக்கும் தனி தனியாக ஒவ்வொரு பிரிவினருக் கும் குறைந்தபட்சம் தலா 3 போட்டிகள் நடத்த வேண்டுமெனவும், கலந்து கொள்ளும் அனைத்து அணிகளும் www.dravidapongal.in

<http://www.dravidapongal.in> என்ற இணையதளத்தில் பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தெரிவித்துள்ளார்.



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் இளந்தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன், வானூர் சட்டமன்ற தொகுதி, கண்டமங்கலம் தெற்கு ஒன்றியம், கோண்டூர் ஊராட்சியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். செ.புஷ்பராஜ், ஆர்.எஸ்.வாசன், கு.செல்வமணி, ச.புஷ்பராஜ், டி.என்.ஜெ.சம்பத், ஏழுமலை, மோகன் தாஸ், குமணன், சுரேஷ், ராமமூர்த்தி, ஆனந்த் ராஜ், ஏழுமலை, அசோக் குமார், பிரபாகரன், அரசு வழக்கறிஞர் கோதண்டபாணி, விஜயலட்சுமி, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம்கோட்டப்பூண்டியில் நடைபெற்ற“ என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பரப்புரை நிகழ்ச்சியில்விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்துஅரசின் சாதனைகள் திட்டங்கள் அடங்கிய துண்டுபிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்,சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி, துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன் உள்ளனர்.







தமிழர் திருநாளாம்
தைத் திருநாளில் சிந்தனைக்கு
விருந்து படைக்க தயாராகிறது
முரசொலி
பொங்கல் மலர்
2026
ஜனவரித் திங்கள்
15ஆம் நாள் வெளிவருகிறது.
முன் பதிவிற்கு முந்துங்கள்...
விலை ரூ.150/-